**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 12 |
| நாள் | : | 11.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மும்தாஜ் பேகம் | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | | தொழில் | : | வி.ஏ.ஓ |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது கீழச்சேரி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேலை செய்திருந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அதே கிராமத்தில் வேலை செய்து வந்ததால் அவர்களை எனக்கு தெரியும். 29.04.2024 காலை நாங்கள் வழக்கம் போல் 10.00 மணிக்கு செல்லும் போது அலுவலத்தில் 1/2மணிநேரமாக ஒரு நபர் காத்திருந்தார். எதற்காக காத்தியிருக்கிறிர்கள் என்று கேட்ட போது அவர் கொலை செய்துவிட்டதாக என்னிடம் சொன்னார். என்னடைய உதவியாளரிடம் இதை பற்றி பேசி, மப்பேடு உள்ள போட்டோ ஸ்டியோவில் முரளி என்பவர் அழைத்து வீடியோ எடுக்கலாம் என்றும், அவர் மாற்றி சொல்லக்கூடாது என்பதற்காக அழைத்து வந்தோம். எதிரி சரவணண் என்பவர் தான் வாக்குமூலம் கொடுத்தார். அவர் வீடு கட்டுவதற்கு டைல்ஸ் போட செலவு ஏற்படுவதாகவும் அதற்கு நான் இதற்கு ஒத்துக்கொண்டேன் என கூறினார். இதை பற்றி யாராவது கூறினார்களா என கேட்டான் அவர் நானே சொல்கிறேன் என்று சொன்னார். அவரை ஆட்டோவில் அழைத்து கொண்டு காவல் நிலையம் அழைத்து சென்றோம். காவல் நிலையத்தில் வைத்து அவர் என் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். அவர் வழங்கி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள

முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.5 ஆகும்.** என்னுடன் என்னுடைய கிராம உதவியாளரும் கையெழுத்து போட்டார். நாங்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். மாலை 4.30 மணிக்கு போலிசார் எங்களை அழைத்தார். 1ம் எதிரி சரவணன் காவலுருடன் சென்ற கொலை நடந்த இடத்தை காண்பித்தா. கொலை எப்படி செய்தேன் என்பது செய்து காண்பித்தார். சம்பவ இடத்திலிருந்து ஓடை உள்ள பகுதியின் புதரிலிருந்து கல்லை எடுத்து காண்பித்தார். அங்கு இருந்து அவர் வீட்டிற்கு சென்று முடிவைத்திருந்த ஒரு பாத்திரத்திலிருந்து கவரிலிருந்து துணி எடுத்தார் அதில் ஒரு லுங்கி மற்றும் ஒரு சட்டை இருந்தது. அதை போலிசார் இரண்டு மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர்கள் **அ.த.சா.ஆ.6 மற்றும் 7 ஆகும்.** அதை போலிசார் வீடியோ எடுத்துக்கொண்டார்கள். அதன் பிறகு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

குறிப்பிட்டு எங்களுக்கு அலுவலக நேரம் கிடையாது எங்கள் பணியானது 24/7 நேரம் ஆகும். எங்கள் பணி நாட்கள் திங்கள் முதல் ஞாயிறு வரை. எங்களுக்கு வருகை பதிவேடு கிடையாது. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறும் போது நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நான் போலிஸ் விசாரணையில் சொல்லும் போது 25.04.2024 அன்றைய தேதியிலிருந்து என்ன சொல்லியுள்ளேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். நான் கொடுத்த வாக்குமூலத்தில தவறு இருந்தால் நான் அதை திருத்தியிருப்பேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்த வித தவறும் ஏற்பட்டு அதை திருத்தவில்லை என்றால் சரிதான். நான் தான் 2024–க்கு முன்பு சரவணக்கு தெரியும் அவர் அதே ஊரை சேர்ந்தவர். இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை அவர்கள் இதை பற்றி என்னிடம் கேட்டவில்லை. கல்லில் பல வகை உண்டு என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6–ல்

ஆற்றங்கரை பக்கத்தில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.7–ல் 1, 2, 4 முதல் 7 காளங்களில் மற்றும் காளம் 3 வெவ்வேறு பேனாக்கில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 29.04.2024 காலை 1ம் எதிரி எங்கள் அலுவலத்திற்க வந்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 27.07.2024 1ம் எதிரியை போலிசார் சட்ட விரோதமாக அடைத்து வைத்து 29.07.2024 அன்று எங்கள் அலுவலத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. போலிசார் அங்கு இருந்து கல் எடுத்துக்கொடுத்து 1ம் எதிரிக்கு அவ்வாறு நடிக்கும் படி வீடியோ எடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சட்ட விரோத காவலில் இருக்கும் போதே போலிசார் பொருட்களை எடுத்து வைத்திருந்தர்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடததிற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் தயார் செய்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்திற்கும் ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியும். இந்த வழக்கிற்கும் 1ம் எதிரிக்கு எந்த வித சம்மந்தும் இல்லை என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 14:59:46 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 13 |
| நாள் | : | 11.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜ் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | மோகன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது கீழச்சேரி கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 29.04.2024 அன்று காலை 10 மணிக்கு எங்கள் அலுவலத்திற்கு சென்றேன். ஒரு நபர் அங்கு காத்திருந்தார். என் என்று விசாரணை செய்தேன். தவறு செய்துவிட்டதாக கூறினார். அப்போது என்னுடன் வி.ஏ.ஓ–ம் இருந்தார். நான் ஒரு நபரை கல்லை கொண்டு தாக்கி கொலை செய்துவிட்டேன் என சொன்னார். அந்த எதிரி தற்போது நீதிமன்றத்தில் உள்ளார். என்னுடைய அதிகாரி மப்பேடு கூட்ரோட்டில் போட்டோகாரரர் அழைத்து வர சொன்னார். நான் அழைத்து வந்தேன். எதிரி சொல்வது அவர் பதிவு செய்து கொண்டார். எங்கள் வி.ஏ.ஓ–ம் எழுதிக்கொண்டார். மதியம் 12.30 மணியளவில் காவல் நிலையத்தில் அவரை ஒப்படைத்தோம். அவர் போலிசார் முன்னிலையில வாக்குமூலம் கொடுத்தார். அதை போலிசார் பதிவு செய்தார்கள். அவர் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.8** ஆகும். அதன் பிறகு போட்டோகாரருடன் நான், வி.ஏ.ஓ. மற்றும் போலிசாருடன் எதிரி சம்பவ இடததை காண்பித்து சம்பவத்தை நடித்து காண்பித்தார். அதன் பிறகு ஆற்றின் முள் புதரிலிருந்து ஒரு பெருங்கல் எடுத்து கொடுத்தார். அதன் பிறகு அவர் வீட்டிற்கு அழைத்து வந்து ரத்த கறை படிந்த சட்டை மற்றும் லுங்கி எடுத்து கொடுத்தார். அவர்கள் எடுத்து மகஜரில்

கைப்பற்றிய பொருட்களை கைப்பற்றுதல் மகஜரில் நானும், வி.ஏ.ஓ–ம் கையெழுத்து போட்டேன். அந்த மகஜரில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.10.** ஆகும். அதன் பிறகு நாங்கள் அனைவரும் காவல் நிலையம் சென்றோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எந்த வித வருகை பதிவேடும் எங்கள் அலுவலகத்தில் கிடையாது. நான் போட்ட மூன்று கையெழுத்துக்களும் மட்பேடு காவல் நிலையத்தில் வைத்து போட்டது என்றால் சரிதான். அ.சா.12–ம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டது என்றால் சரிதான். போலிசார் கேட்டுகொண்தற்கு தான் கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் சரிதான்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 14:59:52 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.